## ஜும்ஆவின் இரண்டாம் குத்பா

أَلْحَمْدُ للهِ ربِّ الْعالمِيْن، الرَّحْمٰنِ الرَّحِيْم، مٰلِكِ يَوْمِ الدِّيْنِ، وَ الصَّلاَةُ وَالسَّلامُ عَلَى رَسُوْلِهِ الْأَمِيْنِ وعَلَى آلِهِ وأَصْحَابِهِ أَجْمَعِيْنَ أَمَّا بَعْدُ!

فَأعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْم، بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ قُوٓا۟ أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا ٱلنَّاسُ وَٱلْحِجَارَةُ عَلَيْهَا مَلَـٰٓئِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَّا يَعْصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ وقَالَ اللَّه تَعالَى يَوْمَ يَفِرُّ ٱلْمَرْءُ مِنْ أَخِيهِ وَأُمِّهِۦ وَأَبِيهِ وَصَـٰحِبَتِهِۦ وَبَنِيهِ لِكُلِّ ٱمْرِئٍ مِّنْهُمْ يَوْمَئِذٍ شَأْنٌ يُغْنِيهِ وقَال اللَّه تَعالَى إِنَّ ٱللَّهَ وَمَلَـٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِىِّ ۚ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا اللّٰهُمَّ صَل وَسَلم على خَاتَمِ النَّبِيين مُحَمَّد ﷺ وَعَلَى الْخُلَفَاءِ الرَّاشِدِيْنَ الْمَهْدِيِّيْنَ أَبِيْ بَكْر الصديْقِ وعُمَرَ الْفَارُوْق وعُثْمَانَ بْنِ عَفَّان وَعَلِيْ أَبِيْ طَالِب وَعَلَى أَزْوَاجِ النَّبِي أُمَّهَاتِ الْمُؤْمِنِيْنَ وَعَلَى سَائِرِ الصَّحَابَةِ وَالتَّابِعِيْن وَمَنْ تَبِعَهُمْ إِلَى يَوْمِ الدين رِضْوَانُ اللهِ تَعَالَى عَلَيْهِم أَجْمَعِيْنَ. اللّٰهُمَّ انْصُرْ مَنْ نَصَرَ دِيْنَ مُحَمَّد ﷺ وَاجْعَلْنَا مِنهُمْ وَاخْذُلْ مَنْ خَذَلَ دِيْنَ مُحَمَّد وَلاَ تَجْعَلْنَا مِنهُمْ عِبَادَ اللهِ رَحِمَكُمُ الله إِنَّ ٱللَّهَ يَأْمُرُ بِٱلْعَدْلِ وَٱلْإِحْسَـٰنِ وَإِيتَآئِ ذِى ٱلْقُرْبَىٰ وَيَنْهَىٰ عَنِ ٱلْفَحْشَآءِ وَٱلْمُنكَرِ وَٱلْبَغْىِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ ﴿٩٠﴾ وَلَذِكْرُ اللهِ تَعَالَى أَعْلَى وَأَكْبَرُ واللهُ يَعْلَمُ مَا تَصْنَعُوْنَ.

*பொருள்: புகழ் அனைத்தும் ஈருலக இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது, அவன் மாபெரும் கருணையாளனாகவும் தனிப்பெரும் கிருபையாளனாகவும், இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதியாகவும் இருக்கின்றான். ஸலவாத்தும் சலாமும் அமானிதத்திற்குப் பாத்திரமான அவனுடைய திருத்தூதர் ﷺ மீதும் அவருடைய வழித்தோன்றல்கள் மற்றும் நபித் தோழர்கள் அனைவர்மீதும் உண்டாவதாக.*

www.uzairfalahi.com

சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் புகலிடம் தேடியவனாக, அருளாளனும் மிக்க அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு துவங்குகிறேன். இறைநம்பிக்கை கொண்டவர்களே, மனிதர்களும் கற்களும் எரிபொருளாகக்கூடிய அந்த நரக நெருப்பிலிருந்து உங்களையும் உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்றிக்கொள்ளுங்கள், அதன்மீது கடும் சீற்றமுடைய வானவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை, அவர்களுக்கு எந்தக் கட்டளை இடப்பட்டாலும் அதனை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். மேலும், அல்லாஹ் கூறுகிறான்: அந்நாளில் தன் சகோதரனையும் தாயையும், தந்தையையும், தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் விட்டு மனிதன் வெருண்டோடுவான். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அந்நாளில் தன்னைத்தவிர வேறெவரைப்பற்றியும் கவனம் செலுத்தமுடியாத நிலை வந்தே தீரும். அல்லாஹ் மேலும் கூறுகிறான்: அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின்மீது ஸலவாத் எனும் நல்வாழ்த்துக்களை அனுப்புகின்றார்கள். நம்பிக்கை கொண்டவர்களே, நீங்களும் அவர்கள்மீது ஸலவாத்தும் சலாமும் சொல்லுங்கள். எங்கள் இறைவனே, இறுதி நபியான முஹம்மத் ﷺ அவர்கள்மீது ஸலவாத்தும் சலாமும் கொண்டுசேர்ப்பாயாக, மற்றும் நேர்மையான, நேர்வழியில் செலுத்தப்பட்ட க்ஹலீஃபாக்களான அபூபக்ர் ஸித்தீஃக் (ர), உமர் அல் ஃபாரூஃக் (ர), உத்ஸ்மான் பின் அஃப்பான் (ர) மற்றும் அலி பின் அபீ தாலிப் (ர) அவர்கள்மீதும், உம்மத்தினரின் அன்னையர்களான நபியவர்களின் மனைவியர்கள் (ர), அனைத்து நபித்தோழர்கள் மற்றும் தாபியீன்கள், மேலும், மறுமைநாள் வரையிலும் அவர்களைப் பின்பற்றி நடப்பவர்கள் அனைவர் மீதும் சாந்தியும் உன்னுடைய திருப்பொருத்தமும் உண்டாவதாக. எங்கள் இறைவனே, எவர்கள் முஹம்மத் ﷺ அவர்களுடைய மார்க்கத்திற்கு உதவியுள்ளார்களோ அவர்களுக்கு நீயும் உதவி செய்வாயாக, எங்களையும் அவர்களோடு சேர்த்துவிடுவாயாக, எங்கள் இறைவனே, எவர்கள் முஹம்மத் ﷺ அவர்களுடைய மார்க்கத்திற்கு தீங்கிழைக்க முயற்சித்தார்களோ அவர்களை நீயும் இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாக்கிவிடுவாயாக, எங்களை அவர்களோடு சேர்த்துவிடாதே. இறையடியார்களே, அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக. நிச்சயமாக, அல்லாஹ் நீதி நிலைநாட்டும் படியும் நன்மை செய்யும்படியும், உறவினர்களுக்கு ஈந்துதவும்படியும் கட்டளையிடுகின்றான், மேலும், மானக்கேடான, வெறுக்கத்தக்க மற்றும் அக்கிரமமான செயல்களை விலக்குகிறான், நீங்கள் படிப்பினை பெறும் பொருட்டு உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான். மேலும், மிக்க உயர்வான, மிகப்பெரியவனான அல்லாஹ்வை துதிப்பதற்காகவும் கூறுகின்றான். நீங்கள் செய்வது அனைத்தையும் அல்லாஹ் நன்கறிவான்.

* * *



www.uzairfalahi.com